முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

அ. சா. 3 நாள்.18.07.2023

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 114/2021 | | |
| பெயர் | ஹரிகிருஷ்ணன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் குத்தாலம் கஞ்சிவாய், மெயின் ரோட்டில் வசித்து வருகிறேன். நான் சென்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜா் எதிரியை எனக்கு தெரியும். அ சா 1 எனது மாமனாா், அ சா 2 எனது மாமியாா், அ சா 3 எனது கொழுந்தியாள். 25/01/2021 அன்று காலை 9 மணிக்கு காஞ்சிவாய் மெயின் ரோட்டில் உள்ள எனது மாமியாா் வீடு எதிரில் குப்பை கொட்டுவதற்காக எனது மாமியாா் சென்றாா். ஆஜா் எதிரியின் மனைவி அவரது குழந்தைகளை அழைத்து கொண்டு எனது மைத்துனருடன் பிரவின் ராஜ் உடன் சென்றுவிட்டதாக சந்தேகப்பட்டு எனது மாமியாரை பாா்த்து ஆஜா் எதிரி தேவிடியா, குச்சிகாாி என்று காமகுரோதமாக திட்டி உன் மகன் தான் மனைவியை இழுத்திட்டி போய்டான் என் ஆஜா் எதிரி கையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது மாமியாரை இடது முன் கையில் குத்தி கத்தியை எடுத்த போது அதை தடுக்க முயற்சித்த போது வலது பக்க விளாவில் குத்தினாா். எனது மாமியாா் சத்தம் போடவே எனது மாமனாரும், எனது கொழுந்தியாலும் ஓடிச் சென்றாா்கள். அப்போது எனது மாமனாரை நெஞ்சு, இடது கையின் மேல் தோள்பட்டையின் அருகிலும், வயிறிலும் இத்தோடு ஒழிந்து போடா என குத்தினாா். எனது கொழுந்தியாலை இடது பக்க விளாவில் கத்தியால் குத்தினாா். அவா்கள் கத்தியவுடன் 15 அடி துாரத்தில் இருந்த நான் எதிரி ஓட முயற்சித்த போது அவரை பிடிக்க வந்தேன். என்னுடன் கோபி என்பவரும் ஓடி வந்தாா். கத்தியை வாய்காலில் போட்டுவிட்டு எதிரி ஓடிவிட்டாா். காயம் பட்டவா்களை ஆம்புலன்சை வர வைத்து அரசு மருத்துவ மனை, மயிலாடுதுறையில் சிகிச்சைகாக அழைத்து சென்றோம். அவா்கள் மேல் சிகிச்சைக்காக திருவாரூா் அரசு மருத்துவ மனைக்கு அழைத்து செல்ல கூறிவிட்டதால் திருவாரூா் அழைத்து சென்றோம். போலீசாா் என்னை விசாாித்தாா்கள்.

குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.